## விரல் அசைந்தால்...

வாசிக்க: யோசுவா 1:1-18

***"இளைஞர்களே, நீங்கள் முதியவர்களுக்குப் பணிந்திருங்கள்" (1 பேது 5:5)***

நமது ஆன்மீகத் தலைவர்களுக்குக் கீழ்ப்படிதல் கடவுளுக்குக் கீழ்ப்படிதலாம். தலைவர்களுக்கு எதிரான எச்செயலும் கடவுளுக்கு விரோதமான பாவம். மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசியபோது அதைக் "கர்த்தர்" கேட்டு அவர்களைத் தண்டித்தார் (எண் 12:1,2). தலைவர்களுக்குக் கீழ்ப்படிந்திருத்தல் "கடவுளுடைய பலத்த கைக்குள்" அடங்கியிருப்பதாம் (1 பேது 5:5,6). கடவுளுக்குக் கீழ்ப்படிகிறேனென்று சொல்லியும் தலைவர்களுக்குக் கீழ்ப்படியாதவன் அகம்பாவி; சத்தியம் அவனுக்குள் இல்லை.

சபைத் தலைவர்கள் இறைவனால் நியமிக்கப்படுபவர்கள். மேய்ப்பருக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு குருவுக்கும் சீடனுக்கும் உள்ளது போன்றிருக்கவேண்டும். சீடத்துவப் பணிக்குத் தலைவர்கள் அழைக்கப்பட்டிருக்கும்போது, சீடர்களைப் பொறுத்தவரை கீழ்ப்படிதல் இன்றியமையாதது (எபி 13:17).

திறமையும் கவர்ச்சியுமானதொரு தலைவனுக்குக் கீழ்ப்படிவது எளிது. இது உலக வழக்கம். ஆன்மீகத் தலைமைத்துவத்தில் அந்நபரின் திறமையல்ல, கடவுளால் அவனுக்குண்டான தகுதியே காரியம். அப்படியே, பகட்டு அல்ல, பண்பு! (2 கொரி 3:5,6). அவர்கள் கடவுளால் அபிஷேகிக்கப்பட்டவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே நாம் தலைவர்களுக்குக் கீழ்ப்படிகிறோம். நாம் அன்பாய் அவர்களை நினைத்து, உத்தமமாய் அவர்களைப் பின்பற்றி, மனப்பூர்வமாய் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, கருத்தாய் அவர்களுக்காய் வேண்டி, சொல்லாலும் செயலாலும் அவர்களை உற்சாகப்படுத்தினால் அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்ற அவர்களுக்கு உதவுகிறவர்களாவோம் (எபி 13:7,17,18,24). நன்றாய் நடத்துகிற தலைவர்களுக்கு, அதிலும் குறிப்பாகத் திருவசனத்தைப் போதிக்கும் பணியில் தீவிரமாயிருப்பவர்களுக்கு, இருமடங்கு கடமைப்பட்டுள்ளோம் (1 தீமோ 5:17).

"நான் சொல்லுகிறதிலும் அதிகமாய்ச் செய்வீரென்று அறிந்து ... உமக்கு எழுதுகிறேன்" என்று பவுலிடம் சாட்சிபெற்ற பிலேமோன் போன்ற மக்களைப் பெற்றுள்ள தலைவர்கள் பேறுபெற்றவர்கள் (பிலே 21). அதே வேளையில் தலைவர்கள் இதைச் சாதகமாகப் பயன்படுத்தி சர்வாதிகாரிகளாகிவிடக்கூடாது. ஊழியங்களில் தலைவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று மேய்ப்பராயிருந்த பவுல் சில ஆலோசனைகளை எழுதிவைத்துள்ளார் (கலா 6:1; 1 தீமோ 5:1,2,21; தீத் 2:7,8 முதலியன). அப்படியே மேய்ப்பராயிருந்த பேதுருவும் 1 பேதுரு 5:1-4இல் மேய்ப்பர்களுக்கு ஆலோசனைகள் கொடுத்தபின் 5ஆம் வசனத்தில் இளைஞர்களை மூப்பருக்குக் கீழ்ப்படியும்படிக் கூறுகிறார். அதாவது, இலட்சியமான தலைமைத்துவத்திற்கே இதயபூர்வமான கீழ்ப்படிதல் கிடைக்கும்.

*ஆவியின் கனியென்னும் அன்பாதி குணங்களை*
*அனுதினமும் இவர் அணிகல மாயணிந்து,*
*மேவும் திருமந்தையை மேய்த்து வளர்க்க நல்ல*
*மேய்ப்பரே, அன்பின் ஆவி வாய்ப்பாய் இவரில் தங்க! (கீர்த்தனை)*

*— வே. சந்தியாகு ஐயர், மதுரை*